# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 மாசி மாதம்

## "அருள்வழங்கி மக்களின் பாதிப்புக்களைப் போக்குதலே மக்கள் தொண்டு!"



"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதுதான் சித்தர் நெறி. அதன்படிதான் பீடாதிபதிகள் முதல் தங்களைப் போன்ற தொண்டர்கள் வரை மக்களின் நோய் நிலைகளையும், பேய் நிலைகளையும், ஏக்க நிலைகளையும், ஏமாற்ற நிலைகளையும், அச்ச கூச்ச மாச்சரிய நிலைகளையும், பல்வேறு வகையான மந்திரவாதிகளின் பாதிப்புக்களையும், நாள் கோள் மீன் பாதிப்புக்களையும் நலப்படுத்துதல் வேண்டும்.

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **“சிந்திக்கத் தயாராகுங்கள்!”** - வெண்ணந்தூரைச் சேர்ந்த ஆசிரியர் திரு அரங்கநாதன் அவர்களுக்கு 27/07/1989இல் குருதேவர் எழுதிய அறிமுக அஞ்சல்.

2. **“மக்கள் தொண்டே மகேசன் தொண்டு”** - புள்ளம்பாடியைச் சேர்ந்த சித்த மருத்துவர் திரு அமிர்தராசு அவர்களுக்கு குருதேவர் 31/07/1989இல் எழுதிய அஞ்சல்.

3. **“குருவில்லா வித்தை பாழ்”** - விரகாலூரைச் சேர்ந்த சித்தரடியாள் திருமதி சமுத்திரவள்ளி அவர்களுக்கு 27/07/1989இல் குருதேவர் எழுதிய அஞ்சல்.

4. **“மக்களுக்கு அருள்வழங்கி பாதிப்புக்களைப் போக்குதலே மக்கள் தொண்டு”** - விரகாலூர் சித்தரடியாள் திருமதி சமுத்திரவள்ளி அவர்களுக்கு 31/07/1989இல் குருதேவர் எழுதிய அஞ்சல்.

5. **“இந்துவேதம் கடவுளர்களாலே எழுதப்பட்டது”** - 1995இல் குருதேவர் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சில வாசகங்கள்.

# சிந்திக்கத் தயாராகுங்கள்!

ஓம்

27-7-1989,

தலைமைப்பீடம்.

ஓம் தாத்தா கருவூரூரே போற்றி!

உயர்திரு A.ரெங்கநாதன், ஆசிரியர் (131-H, செக்கான்காடு, வெண்ணந்தூர் Post, இராசிபுரம் வட்டம், சேலம் மாவட்டம் - 637505) அவர்கள் சமூகத்திற்கு!

1) பேரார்வத்துக்குரிய இனிய நண்ப! தோழா! தங்களுடைய 21-7-89ஆம் தேதியிட்ட அஞ்சல் குருதேவரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. குருதேவர் மந்திர நூல்களும், வரலாற்று நூல்களும் எழுதிக் கொண்டிருப்பதாலும்; நாடெங்கும் அனுப்புவதற்கு அருளூறு பூசனைப் பொருட்கள் திருநீறு, குங்குமம், மஞ்சள், முடிகயிறு, தாயத்து, எந்திரம், சக்கரம், ... முதலியவைகளைத் தயாரித்துக் கொண்டிருப்பதாலும்; அண்மையில் சென்று வந்த திருச்சி, தஞ்சை வட்டார நண்பர்களுக்கு நெடிய அஞ்சல்கள் எழுதிக் கொண்டிருப்பதாலும்; கல்லூரிப் பணிகள் மிகுதியாக இருப்பதாலும், உடனுக்குடன் தங்களுடைய அஞ்சலுக்குப் பதில் கூற இயலவில்லை. எனவே, குருதேவர் தங்களைப் பற்றி அவ்வப்போது கூறிய கருத்துக்களும், செய்திகளும் தொகுத்து இந்த அஞ்சலில் சுருக்கமாக எழுதப்படுகின்றன. இந்த அஞ்சலின்படி நீங்கள் செயல்படலாம்.

ஓய்வின்படி மதுரை சென்று வியாழனன்று தத்தனேரி பூசையிலும், மறுநாள் வெள்ளி காலையில் தாத்தா மதுரைப் பாண்டிமுனீசுவரர் கோயில் வழிபாட்டிலும், மாலையில் ஆத்தாள் தேவி அருளாட்சிச்

செல்வி மீனுட்சி அம்மன் ஆலயம் சென்று வழிபாட்டிலும் நமது இயக்க அடியான்களே சந்தித்து உரையாடினுல் புதுத் தெளிவையும், தெம்பையும் தங்களுக்குத் தரும்.

**குறிப்பு:-**

தாங்கள் குருதேவரைச் சந்திக்க வரும் முன்பாக ஓரளவாவது சித்தர் நெறியின் ஏட்டறிவையும், பட்டறிவையும் (Both Theoretical and Practical Knowledge of the Siddharism) சேகரித்துக் கொண்டு வருவது நல்லது. தங்களுக்காக கருத்து விளக்க நெடிய அஞ்சல் எழுத இப்போதைக்கு நேரமில்லே. ஆனுல், தலேமைப் பீடத்திலிருந்து 29-5-89இல் துறையூர் நண்பர் து.ஏ. இரமணனுக்கு எழுதிய அஞ்சல் நகல் சீ.மணியிடம் உள்ளது. அதை தாங்கள் பெற்றுப் படித்துவிட்டு; தாங்களே தம் கைப்பட அதற்கு மூன்று பேனு நகல்கள் எழுதி தலேமைப்பீடத்துக்குக் காணிக்கையாக அனுப்புங்கள். (ஏனெனில், தங்களின் கையெழுத்து நன்ருக உள்ளது.) இதுபோல் சமுத்திரவள்ளிக்கு எழுதிய அஞ்சல்களே மூன்று நகல்கள் எழுதியும்; Dr. S. அமிர்தராசுவிற்கு எழுதிய அஞ்சலுக்கு நகல்கள் எழுதியும் தலேமைப்பீடம் அனுப்புங்கள். இதேபோல், வேம்படிதாளத்தில் சீ.மணி, வெங்கடேசன் பொறுப்பிலுள்ள கையெழுத்துப் பிறதி நூலகத்தில் (The Manuscript Library) இருக்கக் கூடிய கட்டுரைகளே தாங்களே எடுத்துப் படித்துத் தேவையான கட்டுரைகளே எடுத்து, இரண்டு பேனு நகல்கள் எழுதி ஒன்றைத் தலேமைப்பீடத்துக்கும் மற்றென்றை தமக்கும் எனத் தயாரிப்பது தங்களுக்கு தேவையான அளவு ஏட்டறிவை வளர்க்கும். அத்துடன் சிறுமுகை, வேம்படிதாளம், இராசிபுரம், கடந்தப்பட்டி, ... முதலிய மேற்கு மண்டல ஊர்களில் உள்ள தோழர்களிடம் மணிக்கணக்கில் உரையாடுவதுடன், மேற்கு மண்டலத்தில் அனேத்துப் பூசைகளிலும் கலந்து கொண்டு வருவீர்களேயானுல்; தங்களுக்குத் தேவையான அளவு பட்டறிவு (The Necessary Practical Knowledge) கிடைத்திடும்.

**<u>சிறப்புக் குறிப்பு</u>:-** தாங்கள் ஆசிரியர் என்பதாலும், தங்களுடைய கையெழுத்து அழகாக இருப்பதாலும், வேம்படிதாளத்தில் கையெழுத்துப் பிறதி இயந்திரம் (Cyclostyle Machine) இருப்பதாலும், தங்களுடைய படிப்புக்கேற்ற முயற்சியை (An educated approach and attempt) செய்து மேற்கு மண்டலம் முழுதும் கையெழுத்துப் பிறதி எடுப்பதற்காக அனைவரிடமும் சிறு தொகை வசூலித்து தாங்களும் ஒரு தொகை போட்டு; பன்னீர்செல்வம், கங்காதரக்குமார், பழ.கோபால், இராமசாமி, கோ.நடராாசன், வெண்ணந்தூர் அருணுசல முதலியார், கணேச முதலியார், தைலா முதலியார், கலைச்செல்வன், கடந்தப்பட்டி தியாகராாசன், வேம்படிதாளம் சீ.மணி, இரா.வெங்கடேசன், இல.க.கணேசன், ... முதலியோர்களைத் துணையாகக் கொண்டு கையெழுத்துப் பிறதி நகலுக்குரிய நகலெடுக்கும் தாள் (Stencil carbon, Stencil Black Ink), நகலெடுக்கும் பேப்பர் முதலியனவற்றை வாங்கி முக்கியமான கட்டுரைகளில் 25, 30 என தயாரித்து; நன்கொடை தந்தவர்களுக்கு இனமாகவும், தலைமைப்பீடத்துக்கு ஒவ்வொன்றிலும் 10 நகல்களும், மீதி நகல்களை சிறுசிறு தொகுதிகளாகச் சேர்த்து பைண்டிங் செய்து ரூ. 5, 10, 15, 20, 25 என்று நமது இயக்கத்தவரிடம் விற்று விடலாம்; தமிழகம் முழுதும் வழங்கி விடலாம். இம் மாபெரும் அரிய பெரிய பணியை தாங்கள் ஏற்றல் சாலச் சிறந்ததாகும். ... ... *[இந்தப் பக்கத்தின் இறுதியில் இரண்டு வரிகள் நகலில் படிக்க முடியாதபடி அழிந்திருந்தன.]*

2) பேரன்புடையீர்! செவ்வாடை அணிவதென்பது உங்களை அருளுலகத்துக்கும், பொருளுலகத்துக்கும் அறிமுகம் செய்து கொள்ளத்தான். அருளுலகைப் பற்றிய மூட நம்பிக்கைகளையும், ஆபாசக் கற்பனைகளையும், புளுகுகளையும் முறியடிப்பதற்காகத் தோன்றியிருப்பதுதான் பகுத்தறிவுப் பூர்வமான இந்து மறுமலர்ச்சி இயக்கம். இது, பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறியான சீவநெறியெனும் இந்துமதம் பிறமண்ணினரான பிறுமணர் எனும்

வட ஆரியர்களின் சூழ்ச்சியால் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுற்று, மீட்சியற்றுக் கிடப்பதை மறுமலர்ச்சி பெறுவதற்காகவும்; ஆட்சிமீட்சி பெறச் செய்வதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றுகும். எனவேதான், இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கம் அருளை அநுபவப் பொருளாக வழங்கி நோயாளிகளையும், பேயாளிகளையும் நலப்படுத்திடும் அருட்கோட்டங்களை நாடெங்கும் அமைத்தும்; பகுத்தறிவுப் பூர்வமான சித்தர்நெறியைப் பரப்பும் பல்வேறு வகையான கலை, அறிவியல் மன்றங்களைத் தோற்றுவித்தும்; குருதேவரால் நேரடியாக உருவாக்கப்பட்டுள்ள ஆயிரமாயிரம் சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் நாடெங்கும் அனுப்பி இலைமறை காயாகச் செயல்படச் செய்தும்; ... தன்மான உணர்ச்சியும், இனமான உணர்ச்சியும், மொழிமான உணர்ச்சியும், தமிழ்ப் பண்பாட்டு நாகரிகப் பிடிப்புணர்ச்சியும், தமிழர் மதத்தின் மீது மெய்யான பத்தியுணர்ச்சியும் உடையவர்களை மட்டும் தேடி எடுத்து ஆங்காங்கே பயிற்சி முகாம்கள் அமைத்து அவற்றையே பாடிவீடுகளாக்கி அருட்படை வீரர்களைத் தயாராக்குகிறது.

ஆனல்!? ஆனல்!? ஆனல்!? தமிழர்களில் முக்கால் பங்கினர்களுக்கு மேல் வறியவர்களாய்! கூலிகளாய்! எடுபிடிகளாய்! கங்காணிகளாய்! அடிமைகளாய்! ஏமாளிகளாக, போலிகளாக, ஏதும் அறியாத அப்பாவிகளாக, அரை வயிற்றுக்குப் போராடும் நடைப்பிணங்களாக வாழ நேரிட்டுள்ள காலமாகிவிட்டது. எனவேதான், ஆங்காங்கே தமிழர்களுக்காகத் தோன்றக் கூடிய அல்லது தோன்றிட்ட எல்லாமறிந்த ஒரு சில தலைவர்கள் கூட எதுவுமே செய்ய முடியாத, அடிமை வாழ்வு வாழ நேரிட்டு விட்டது. எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கம் பெரிய பெரிய நகரங்கள் முதல் சிறுசிறு குக்கிராமங்கள், பட்டி தொட்டிகள் என்று எங்கும் பரவியிருந்தும் கூட ஏதும் செய்ய முடியாத நிலையே இருந்து வருகிறது.

3) இவற்றிற்கெல்லாம் மேலாக குருதேவர் புத்துயிர்ப்புச் செய்த 48 வகைக் கருவறைகளாலும், 48 வகை வெட்டவெளிக் கருவறைகளாலும், 48 வகை வழிபாட்டு நிலையக் கருவறைகளாலும்; குருதேவர் நாடெங்கும் தோற்றுவித்துள்ள அருட்பணி விரிவாக்கத் திட்ட அருட்கோட்டங்களாலும்; குருதேவரால் உருவாக்கப்பட்டு நாடெங்கும் சுற்றி வந்து அருளை அநுபவப் பொருளாக வழங்கிடும் சித்தரடியான், சித்தரடியாள், சித்தரடியார்களாலும்; குருதேவரின் மின்னல் வேகச் சுற்றுப்பயணங்களாலும் தமிழகத்தில் அருள் ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓட ஆரம்பித்து விட்டது.

அதனால்தான், கோயில் கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டும், குடமுழுக்குச் செய்யப்பட்டும் வருகின்றன. எங்குப் பார்த்தாலும் சித்து விளையாடல்காரர்களும், சித்தி பெற்ற அருளாளர்களும், சீவன்முத்தர்களும், மெய்யான பத்தர்களும் பத்தியுணர்ச்சி கிளர்ச்சி மிக்க வளர்ச்சி பெறுமளவிற்குச் செயல்படத் துவங்கி விட்டார்கள். அருளுலகின் இருள்நிலைகள் அகன்று எங்கும் பேரொளி பரவத் தொடங்கி விட்டது.

பெரும்பாலான தமிழர்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் மெய்யான தமிழ்மொழிப் பற்றுணர்ச்சியும், தமிழ்மொழி சார்ந்த இனப்பற்றுமிக்க இன ஒற்றுமையுணர்ச்சியும், தமிழரின் உண்மையான மதம் எது என்று தேடிப் பார்க்கும் ஆராய்ச்சி நோக்கும் போக்கும் கொண்ட பத்தியுணர்ச்சியும், தமிழ்மொழி சார்ந்த அகப் பண்பாட்டு உணர்ச்சியும், நாகரிகப் பிடிப்புணர்ச்சியும் குறிப்பிடத்தக்க அளவு விழிச்சி பெற்று விட்டன! எழிச்சி பெற்று விட்டன! செழிச்சிக்குரிய புரட்சியைச் செய்யத் துவங்கி விட்டன.

ஆனால்!? ஆனால்!? ஆனால்!? ... தமிழர்களுக்குத் தலைமை தாங்கி மொழிவழியில் அனைத்து வகையான புரட்சிகளைச் செய்வதற்காகவும், பயிற்சிகளையும் முயற்சிகளையும் வழங்குவதற்காகவே

தோன்றியிருக்கக் கூடிய ஒரே ஒரு தமிழினக் குருபீடம், தமிழின ஆச்சாறியார், தமிழினத் தலைவர் நமது குருதேவர், ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள்தாம் என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ளவில்லை! புரிந்து கொள்ளவில்லை!! புரிந்து கொள்ளவில்லை!!! புரிந்து கொள்ளவேயில்லை! <u>**அதைச் செய்யத்தான் முயல வேண்டும் நீங்கள்**</u>.

எனவேதான் ஒரு மன்றம் அமைக்க அநுமதி கேட்டிருக்கும் தங்களுக்கு ஓராயிரம் மன்றங்கள் அமைக்க அநுமதி தந்திருக்கிறார் குருதேவர். அது மட்டுமல்ல, உங்களைத் தமிழகத்தின் அருட்படைத் தளபதிகளுள் ஒருவராக நியமித்து மின்னல் வேகம், புயல் வேகமெனப் புறப்பட்டுச் சென்று நூற்றுக்கணக்கான அருட்கோட்டங்களையும், ஆயிரக்கணக்கான மன்றங்களையும் அமைக்க வேண்டுமென்ற அருளுலக அறிவிப்பினையும் வழங்குகிறார் குருதேவர். தாங்கள் ஏதோ வாழ்ந்தோம், மறைந்தோம் என்று இல்லாமல் <u>**தமிழின மொழி மத விடுதலை வரலாற்றில்**</u> ஒரு புகழ் மிக்க வீரத் தளபதியாகிடல் வேண்டுமென்றும் வாழ்த்துகிறார் குருதேவர்.

உங்களைக் குருதேவர் ஞானக்காட்சியில் பார்த்து முடிகயிறு, திருநீறு, குங்குமம் அனுப்பியுள்ளார். எவ்வளவு விரைவில் நேரில் வந்து குருதேவரைக் காண முடியுமோ அவ்வளவு விரைவில் வந்தால் நல்லது! வாழ்க! வளர்க!

<u>**குறிப்பு:-**</u>

எனவே, தாங்கள் உடனே சிவப்புச் சட்டை, சிவப்புக் கால்சட்டை, சிவப்பு குப்பாயம் (கோட்), சிவப்பு வேட்டி, சிவப்பு சிப்பா, ... பலவகையான உடைகளைத் தைத்துக் கொள்ளுங்கள். என்ன அலுவலாகச் செல்கிறீர்களோ!? எப்படிப்பட்ட மக்களைச் சந்திக்கச் செல்கிறீர்களோ?! அதற்கேற்ப வேட்டியோ, சட்டையோ, சிப்பாவோ, கோட்டோ, கால்சட்டையோ அணிந்து கொண்டு செல்லுங்கள். நாம்

ஒரு விடுதலை இயக்க வீரர்கள் என்ற நினைப்போடு இராணுவ உடை அணிவது போல சிவப்பு உடையைச் சீராக அணிய வேண்டும். அதற்கேற்பத் தொண்டர்களைத் தயாரியுங்கள்.

பத்தி வழியில் தங்களை வந்து அணுகுபவர்களைச் சன்னிதான உடை (4 முழ வேட்டி சிவப்பு இடுப்பிலும், வேட்டிக்கு மேல் இடுப்புக் கச்சையாக 6 முழ சிவப்பு கட்டியும், தலைப்பாகையாக 10 முழம் சிவப்பும் கட்ட வேண்டும். 4 முழத்தை இரண்டாக மடித்து வேட்டி மடித்துக் கட்டுவது போல் கட்ட வேண்டும். இது பற்றிய விவரங்களை நமது அடியான்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்) அணிந்து பூசையில் அமர்ந்தால்தான் அருளுலக அறிமுகங்களும், அருளுலகப் பயன்களும் கிடைக்கும். இவற்றை அநுபவப் பூர்வமாகத் தெரிந்து கொள்ளலாம்.

சித்தர்நெறியின் தலைவனான சிவன் சிவந்த ஆடையை அணிந்தவன் என்ற அளவில் மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். மற்ற விளக்கங்களைப் போகப் போகத் தெரிந்து கொள்ளலாம். **சிவப்புடை அணியாமல் சித்தர்நெறி இயக்கங்களில் ஏதும் செய்ய இயலாது.**

4) தாங்கள் தங்களுடைய விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பூசைகளுக்குச் செல்லலாம். ஏனென்றால், இந்த நாட்டிலுள்ள அனைத்துமே (வழிபடும் இடங்கள்) பதினெண்சித்தர்களின் சித்தர்நெறிக்கு உரியவைதான்.

5) நமது தாய்மொழியான தமிழ்மொழியும், நமது இனமான தமிழினமும், நமது மதமான மெய்யான இந்துமதமும், இவை சார்ந்த இலக்கியங்களும், கலைகளும், பாரம்பரியப் பயிற்சிகளும், செய்திகளும், ... உலகத்தாரின் கண்ணையும், கவனத்தையும், கருத்தையும், மதிப்பையும், மரியாதையையும் பெறாமல் அனாதைகளாகத்தான் கிடக்கின்றன. எனவே, இந்த அனாதைகளைக் காப்பாற்ற உங்களுடைய நினைவுகளையும், உணர்வுகளையும், எண்ணங்களையும், சிந்தனைகளையும்,

செயல்களையும், செல்வாக்குகளையும், செல்வங்களையும், ... செலவழித்திட முன்வாருங்கள்! முன்வாருங்கள்! முன்வாருங்கள்!

6) உங்களுடைய ஊரிலும், சுற்று வட்டாரத்திலும் உங்களுக்கு இருக்கக் கூடிய செல்வாக்கினைப் பயன்படுத்தி இ.ம.இ.க்கு தெருக்கள் தோறும் கிளைகள் தோற்றுவியுங்கள். வீடுகள் தோறும் உறுப்பினர்களைச் சேகரியுங்கள். கூடுமானவரை கிராமங்கள் தோறும் கோயில்களிலும், பொது இடங்களிலும், ஆர்வமுள்ள தனியார் இல்லங்களிலும் இ.ம.இ.யின் கொடியை ஏற்றுங்கள். ஊர்தோறும் சுடுகாடுகளில் திரிசூலம் நட்டு, விளக்கு மாடம் அமைத்து, யாகம் செய்து சுடலைப் பூசையைத் துவக்குங்கள். ஊருக்குள் மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றி; திரிசூலம், விளக்கு மாடம், யாகசாலை அமைத்து யாகம் செய்து நோயாளிகளையும், பேயாளிகளையும் நலப்படுத்துங்கள்.

பொதுமக்களின் ஆர்வங்களுக்கேற்ப நாயன்மார்கள், ஆழ்வார்கள், தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், இராமலிங்க அடிகளார், ... முதலிய அருளாளர்களின் பெயரிலும், ஆடல்பாடல் கூத்து நாடகம், பேச்சுக்கலை, உடற்பயிற்சி, ... முதலியவைகளின் பெயரிலும் மன்றங்களை நிறையத் தோற்றுவித்து நிறைய உறுப்பினர்களைச் சேர்த்து; அந்தந்த அமைப்புக்குரிய தலைவர், இணைத் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், இணைப் பொருளாளர், துணைப் பொருளாளர், ... முதலிய பதவிகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுத்து நிலையான நிறுவனங்களாக ஆக்கிடுங்கள்.

இவற்றின் எது சார்பாக வேண்டுமானாலும் குருதேவராகிய எம்மையும், இயக்கத்தவர்களையும் அடிக்கடி அழைத்து உரையாற்றும்படி செய்து கொண்டே இருங்கள். ஏறத்தாழ நமது இயக்கத்தில் உள்ளவர்கள் அனைவருமே சொற்பொழிவாளர்கள்தான், மேடைப் பேச்சாளர்கள்தான்.

<u>**குறிப்பு:-**</u>

சொற்பொழிவின் பெயரால் அலங்கார ஆடம்பரம் செய்து விடாதீர்கள். அதாவது பணத்தை வீணாக்கிடாதீர்கள். ஏதேனும் ஒரு ஒலிபெருக்கி நிறுவனத்தை நிரந்தரமாக மலிவான வாடகைக்கு <u>வாடிக்கையாகப் பேசிக் கொள்ளுங்கள்</u>. அதனால் சொற்பொழிவுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்னால் சுற்றுவட்டாரங்களிலும், கிராமங்களிலும் சொற்பொழிவு பற்றி ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திடுங்கள். சொற்பொழிவுக்காக அலங்கார வளைவுகள், மேடைகள், மாலைகள், விருந்துகள், ... என்று அடிக்கடி பெரும்பொருட் செலவுகள் செய்து ஏற்பாடுகள் செய்து விட்டு; பிறகு அடிக்கடி சொற்பொழிவு நடத்த முடியாத நிலையை உருவாக்கி விடாதீர்கள். எனவே, ஒலிபெருக்கி மட்டும் இருக்கட்டும்! வரக் கூடியவர்களுக்குப் பயணச் செலவு தந்தும், எளிய உணவும் கொடுத்தால் போதும்; அப்பொழுதுதான் நாம் கருத்துப் புரட்சியைச் செய்ய முடியும்.

<u>**ஏனென்றால், நாம் இதுவரை 449 அறிவிக்கைகள் அச்சடித்திருக்கிறோம். சிலவற்றில் இலட்சம் பிறதிகள் கூடப் போட்டிருக்கிறோம். ஆக 4½ கோடித் தமிழர்கள் உள்ள நாட்டில் ஏழெட்டுக் கோடி அறிவிக்கைகளுக்கு மேல் அச்சிட்டுப் பேருந்து நிலையம், காவல்நிலையம், மருத்துவமனை, நீதிமன்றம், அங்காடி, கடற்கரை, தேர்த் திருவிழாக் கூட்டங்கள், கண்காட்சி பொதுக்கூட்டம், இரயிலடி, ... என்று ஏறத்தாழ எல்லா இடங்களிலும் நமது தொண்டர்கள் தொடர்ந்து நின்று நின்று அறிவிக்கைகளை வழங்கிப் பார்த்து விட்டார்கள். அதாவது, இந்த அச்சிட்ட அறிவிக்கைகள் கோடைமழை போல் தமிழகம் முழுவதும் பெரும் மழையாகப் பெய்தும் கூட நமது மக்களிடையில் எந்த ஒரு விளைவும் ஏற்படவில்லை. அதாவது, நமது அறிவிக்கைகள் கோடைமழையாகப் பெய்தாலும், அந்த மழை பாலைவனத்தில் பெய்த மழையாகி விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது**</u>.

இதுதான், உண்மையும் கூட. அதாவது, தமிழகத்துச் சிறுர் சிறுமி முதல் வயதான மூதாட்டிகள், பெரியவர்கள் வரை அவரவர் வயதுக்கேற்பத் தேவைப்படும் தேவைகளே எல்லாம் கால்பங்கு கூட நிறைவேருமல்!?, ... நிறைவேற்றிக் கொள்ள முடியாமல்?! ஏமாற்றமடைந்தும், ஏக்கம் பிடித்தும், எரிச்சலுற்றும், பாலைவனத்து மணல் போல் நெஞ்சமும் சிந்தையும் சூடேறிக் கிடக்கிருர்கள். ஆனுல்! ஆனுல்!! ஆனுல்!!! ... இவர்களில் ஆயிரத்தில் ஒரு பகுதியினர் கூட இந்த அவல நிலைகள் ஏன்? இந்தக் கேவல நிலைகள் ஏன்? இந்தப் பரிதாப நிலைகள் ஏன்? இந்தப் பாதிப்புக்கள் ஏன்? என்று எண்ணி எண்ணி எரிமலையெனக் குமுறி வெடிக்கத் தயாராகவில்லை! தயாராகவில்லை!! தயாராகவில்லை!!! தயாராகவேயில்லை!

இவற்றிற்கெல்லாம் காரணமே போலியான அன்னிய நாகரிக மோகம்; அளவுக்கு மீறிய பொழுதுபோக்கின் வேகம்; அன்னிய மொழிகளின் போலியான வழிகாட்டல்; சமய சமுதாய அரசியல்வாதிகளின் போலியான தலைமை; போலியான *ஹிந்துமத* வாழ்வு; ... முதலியவைதான்! முதலியவைதான்!! முதலியவைதான்!!! இவை பற்றிச் சிந்திக்க இந்த நாட்டில் எம்மை விட்டால் வேறு நாதியில்லை! நாதியில்லை!! நாதியில்லை!!!

இந்த நாட்டு மக்களுக்கு நல்ல தலைமையில்லை! நல்ல வழிகாட்டல் இல்லை! நல்ல வழித்துணையில்லை! ஏறத்தாழ இந்த நாட்டு மக்கள் அனுதைகளாக்கப்பட்டு விட்டார்கள்! வந்தாரெல்லாம் இந்நாட்டு மக்களே வேட்டையாடுகிருர்கள்! அடிமைப்படுத்தி வாட்டி வதைக்கிருர்கள்! எடுபிடிகளாக்கி கொடுமைப்படுத்தி விட்டார்கள்! பாவம், இவர்கள் தாய்மொழியைப் பற்றியோ, தங்களின் இனத்தைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ, சமுதாயத்தைப் பற்றியோ, பழம்பெருமைகளேப் பற்றியோ, வாழ்வியல் உரிமைகளேப் பற்றியோ நினைத்துப் பார்க்கக் கூடத் தெரியாதவர்களாக, முடியாதவர்களாகவே ...

தொடர்ந்து வாழுகிறார்கள்! வாழுகிறார்கள்!! வாழுகிறார்கள்!!! இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு எனக்கென்ன வந்தது என்று அடங்கி ஒடுங்கி வாழத் தெரியாதவர்தான் நீங்கள் சந்திக்க விரும்பும் குருதேவர்! குருதேவர்!! குருதேவர்!!! எனவே, நண்பரே! நமது சந்திப்பு பொங்கி வரும் கடலும் கங்கையும் சந்திப்பது போலத்தான் இருக்கும். **அது பற்றிச் சிந்திக்கத் தயாராகுங்கள்**.

"**மக்கள் தொண்டே மகேசன் தொண்டு**" - அதுவே பிறவாமையையும், இறவாமையையும் தரும். அதற்குக் குருவழிச் செயல்பட முயல்க!

**அன்பு**
**சித்தர்,**
**29-7-89.**

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்,**

**தலைமைப்பீடம்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!

ஓம்

தலைமைப்பீடம்,
31-7-89.

அருள்மிகு புள்ளம்பாடி இ.ம.இ. தலைவர், உத்தண்டகாளி சன்னிதானம், திரு Dr S.அமிர்தராசு (இரயில் நிலையப் பாதை, புள்ளம்பாடி-621711, திருச்சி மாவட்டம்) அவர்கள் சமூகத்திற்கு குருதேவரின் திருவுளம் அறிந்து தலைமைப்பீடம் விடுக்கும் செயல்நிலை விளக்க மடல்:-

1) அனைத்தும் குருவின் செயலே!

2) தங்களின் 29-7-89ஆம் தேதியிட்ட அஞ்சல், நகல்கள் இன்று 31-7-89இல் கிடைத்தன. குருதேவருக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டது.

3) தங்கள் கவனத்திற்கு தெரிவிப்பது என்னவென்றால் தாங்கள் அனுப்பிய நகல்கள் பயன்படாமல் போய்விட்டது. அதாவது தாங்கள் மார்சின் (Margin) விடாமல் நகல் எழுதியனுப்பி இருக்கிறீர்கள். இது கண்டிக்கத் தக்கது. தங்களுக்கு தலைமைப்பீடத்திலிருந்து பலவகைப்பட்ட அஞ்சல்களும், நகல்களும் அனுப்பியிருப்பதை நன்கு பாருங்கள்; அவைகளில் எப்படி மார்சின் விட்டு எழுதியிருக்கிறது என்று. அதாவது முன்பக்கத்தில் விடும் மார்சினை அடுத்த பக்கத்தில் எழுதும்போது அப்படியே விட்டுவிட வேண்டும். எடுத்துக்காட்டாக இந்த அஞ்சலையே பார்த்துக் கொள்ளுங்கள். இதேபோல்தான் இனிமேல் அஞ்சல்கள், நகல்கள் எழுதி அனுப்ப வேண்டும். நகல்கள் மொத்தமாக அனுப்ப வேண்டுமென்பது இல்லை. ஒவ்வொன்றாக

எழுத எழுத அனுப்பி வைக்கலாம். புரிந்து செயல்படுங்கள். தாங்கள் மேலும் ஒரு கோப்பு தயாரித்து அதில் அஞ்சல்கள், நகல்கள் தனித்தனியாகப் பாதுகாத்திடுங்கள்.

4) தங்களுக்கு அனுப்பப்பட்ட கவர்களை தாங்கள் படித்துத் தருவதற்காகத்தான் பின்போட்டு அனுப்பப்பட்டது. ஆனால் தாங்கள் இன்னும் படிக்காமல் வைத்திருப்பதற்காக வருந்துகிறோம். இனிமேலாவது புரிந்து செயல்படுங்கள். தாங்கள் மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளுக்கும் மண்டல தலைவி சித்தரடியாள் K. சமுத்திரவள்ளியை துணையாகக் கொண்டு செயல்படுங்கள். பெண் என்று உதாசீனம் செய்து விடாதீர்கள். சமயபுரம் மாரியம்மனைக் கூட நாம் பெண்ணாகப் பார்ப்பது இல்லை! புரிந்து செயல்படுங்கள்!

5) தாங்கள் சித்தர் மருத்துவர் சங்கத்திலும், சபையிலும், கூட்டங்களிலும் எவ்வளவுதான் அக்கறையும், ஆர்வத்தையும் எடுத்துக்கொண்டு செயல்பட்டாலும் உங்களுக்குப் பேரும், செல்வாக்கும், பொதுவாழ்வில் உதவி நிலையும், இயக்கத்தில் பதவி நிலையும் கிடைக்காது! கிடைக்காது!! கிடைக்காது!!! கிடைக்கவே கிடைக்காது! இதைப் புரிந்து, விரைந்து குருதி வண்ணச் செவ்வாடை அணிந்து தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் புள்ளம்பாடி மற்றும் சுற்று வட்டாரங்களில் சுற்றுப்பயணம் செய்து;

**பதினெண்சித்தர்களுடைய ‘<u>சித்தர் நெறி எனும் சீவநெறியான மெய்யான இந்துமதம்</u>’;**

**பதினெண்சித்தர்கள், பதினெண்சித்தர் பீடாதிபதிகள், 48 வகைப்பட்ட சித்தர்கள், 48 வகை வழிபடு நிலையினர்கள்;**

**48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்கள், 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகள், 48 வகைப்பட்ட கருவறைகள்;**

**நான்கு யுக வரலாறுகள்;**

**பத்தியார் சத்தியார் சித்தியார் முத்தியார் என நான்கு வகைப்பட்ட அருளாளர்கள்;**

நான்மறைகள் நான்முறைகள் நானெறிகள் நான்வேதங்கள் என நான்கு வகைப்பட்ட இந்துமதத்தின் அடிப்படைகள்;

I. 'இந்துமதத்தின்படி கடவுள்கள் மனிதர்களாகப் பிறக்கிறார்கள்; மனிதர்கள் கடவுள்களாக உயருகிறார்கள்';

II. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு';

III. 'முன்னோர்களை வழிபடலும் மூத்தோரை மதித்தலுமே இந்துமதம்';

IV. 'அருளை அநுபவப் பொருளாக வழங்க வல்லதே இந்துமதம்';

V. 'கடவுள் தனிமனிதர்களுக்குரிய எல்லாவகையான உறவுமுறைகளிலும் தோன்றித் துணையாக இருந்து உதவி செய்வார்';

VI. 'இந்துமதத்தின்படி மெய்யான பத்தியுள்ளவர்கள் கடவுளை நண்பனாகவும், தோழனாகவும், தொண்டனாகவும், வழித்துணைவனாகவும், வழிகாட்டியாகவும், ஞானாசிரியனாகவும் பெற முடியும்';

VII. 'குருபத்தியே அனைத்து வகையான சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் தரும்';

VIII. 'குருவழிப் பயிற்சியால் எதையும் சாதிக்கலாம்';

IX. 'குரு தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது';

X. 'குருவே அனைத்துக்கும் கரு, தரு, திரு';

XI. 'இந்துமதப்படி சித்தர்கள் கல்லையும், மண்ணையும், வாழும் பயிரினங்களையும், உயிரினங்களையும் கடவுளாக்கும் வல்லமை பெற்றவர்கள்';

XII. 'இந்துமதத்தின்படி உருவ வழிபாடே கடவுளை அடைவதற்கு சிறந்த வழி';

XIII. 'இந்துமதமே மனித குல வரலாற்றின் தொகுப்பும், விளக்கமும் ஆகும்';

XIV. 'இந்துமதத்தின்படி மருந்தும் மந்திரமும் மனிதனின் கண்கள்';

XV. 'இந்துமதத்தின்படி குருவழியாக வழிபட்டால் ஆகாதது, அடையமுடியாதது என்று எதுவுமே இல்லை';

**XVI. 'இந்துமதத்தின்படி வழிபட்டால் அக இருளையும், புற இருளையும், அனைத்து வகையான தொல்லைகளையும், துன்பங்களையும் அகற்றிக் கொள்ளலாம்';**

**XVII. 'இந்துமதம் ஒன்றுதான் "பத்தி செய்து உய்வு பெறுங்கள் மானுடரே!" என்று தெளிவாகவும், துணிவாகவும் கூறுகிறது';**

**XVIII. 'இந்துமதமே ஏட்டறிவாலும், பட்டறிவாலும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது';**

... என்ற பதினெண்சித்தர்களுடைய பதினெட்டு வகையான வாசகங்களை, வாக்கு வாக்கியம் வாசகம் என ஆறு வகைப்பட்ட (6 x 3 = 18) இலக்கியங்களின் கருத்துரைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறுங்கள். ஊர் தோறும் அருட்கோட்டம் வையுங்கள். இ.ம.இ.க்கும், தமிழின மொழி மத விடுதலை இயக்கங்களுக்கும் அமைப்புக்களை உண்டாக்குங்கள். நீங்கள் இப்படி செயல்படுவதன் மூலம் உங்கள் வட்ட, வட்டார, மாவட்ட எல்லைகளுக்குரிய பதவிகளைப் பெறலாம். அதற்கேற்ற செல்வாக்கினையும் பெறலாம். இயக்கத்தில் உள்ள குருதேவர் அறிக்கைகளையும், அச்சிட்ட அறிவிக்கைகளையும் பலமுறை திருப்பித் திருப்பிப் படியுங்கள். குருதேவரை நேரில் அழைக்கும் போது என்னென்ன புத்தகங்கள் தேவையென்பதையும் குறிப்பிட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

6) தங்களுக்கு அருளுலக யோகங்கள் இருப்பதால் விரைவில் நீங்கள் அருட்கணிப்பு கணிக்கலாம். பிறருக்கும் மந்திரிக்கலாம். ஞாயிறு, செவ்வாய் கிழமைகளில் தவறாமல் விரகாலூர் சென்று வாருங்கள். சமுத்திரவள்ளி பெண்ணுகை இருப்பதால் சமுத்திரவள்ளியிடம் உங்கள் செயல்திட்டத்தைக் கூறிவிட்டு; இலால்குடி, காட்டூர், டால்மியாபுரம், அரியலூர், கோவிலூர், திருவையாறு, பெரும்புலியூர், தஞ்சாவூர் முதலிய பல ஊர்களுக்கு அடிக்கடி சுற்றுப்பயணம் செய்து அவ்வூர் வட்டார அடியான்களையெல்லாம் அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். ஏற்கனவே உங்களுக்கு அறிமுகமான சித்த வைத்தியர்களை எல்லாம் நமது

இயக்கங்களில் உறுப்பினராக்குங்கள். திருவாரூரில் இருக்கும் அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் திரு பெ.சுப்பையா B.E. (DM Inspection Technical சோழன் போக்குவரத்துக் கழகம், திருவாரூர் P.O., தஞ்சை-613001) அவர்களை அடிக்கடி சந்தித்துக் கருத்து விளக்கம் பெறுங்கள். அவருடைய அறிவுரைகளைக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் குருதேவரை அடிக்கடி திருச்சி மாவட்டத்திற்கு வரவழைத்து பல இடங்களிலும் குருதேவரின் சமயச் சொற்பொழிவுகளையும், அருட்பணிகளையும் நிகழ்த்தினால்தான் நம் இயக்கத்திற்கும், உங்களுக்கும் நல்ல வளர்ச்சி கிடைக்கும். கிணற்றுத் தவளையாக இனியும் வாழாதீர்கள். பலரையும் சென்று பாருங்கள்! பாருங்கள்! பாருங்கள்! உங்கள் வீட்டருகிலேயே ஒரு அருட்கோட்டம் அமைத்துச் செயல்படுங்கள். (முடிகயிறு ரூ.3/-) அனுப்பியுள்ள திருநீறுடன் நிறைய திருநீறும், குங்குமத்துடன் அதிகம் குங்குமம் கலந்து மக்களுக்கு வழங்குங்கள். உடன் பதில்.

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
**31-7-89.**

<u>நகல் நல்குபவர்:-</u>

அருள்மிகு காஞ்சி ஏகாம்பரேசுவரர்,
அருள்மிகு பசிய இளந்தலைகளை மாலையாக பூண்ட கபாலீசுவரி சன்னிதானம்,
அருள்மிகு திருப்பூந்துருத்தி புட்பவனநாதர் அழகாலமர்ந்த நாயகி சன்னிதானம்,
அருள்மிகு எருமைநாட்டு வெற்போர் கொற்றவை சன்னிதானம்,
வடபுலத்துக் கொள்கைபரப்புச் செயலாளர்,
அருட்சேனைத் தளபதிகளுள் ஒருவர், குருதேவரின் ஏற்புச் செல்வன்,
சித்தர் மகன் சீ.மோகன், புவனேசுவர், 13.8.89.
S.MOHAN, B.Sc., B.Tech., 28, Sahid Nagar, Bhubaneswar-751007, Orissa State.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: ஒரிசா சித்தரடியார் திரு சீ.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருவில்லா வித்தை பாழ்!

ஓம்

27/7/89,

தலைமைப்பீடம்.

(1) அன்பு மகளே! உன்னுடைய 24/7/89 தேதியிட்ட அஞ்சல் கண்டு மிகவும் மகிழ்ச்சியுற்றோம். அதில், நீ சுழன்றடித்த சூருவளிக் காற்றுக்கிடையில்; ஊரார் வரத் தயங்கிய போதும் அனைவரையும் வற்புறுத்தி அழைத்துக் கொண்டு சென்று நோயாளிகளையும், பேயாளிகளையும் நலப்படுத்துவதற்காக சுடலை யாகத்தைச் சிறப்பாகச் செய்து முடித்து வந்ததாகத் தெரிவித்திருக்கிறாய். அச்செய்திகளை பலமுறை திருப்பித் திருப்பிப் படித்து மகிழ்ந்தோம் யாம். உன்னுடைய கடமை உணர்வு, பொறுப்புணர்ச்சி முதலியவைகள் மிகமிக பாராட்டுதற்குரியவை. உன்னுடைய துணிச்சல்; ஊரார்களையெல்லாம் ஒன்றுதிரட்டி அழைத்துச் சென்ற தலைமைப் பண்பு ... முதலியவைகளை நோக்கும் போது நீ அச்சமும், கூச்சமும், பயமும் நிறைந்த ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணல்ல; ஒரு மாவீரம் மிக்கப் பெருந்தலைவி என்ற பேருண்மை விளக்கமாகி இருக்கிறது. மிக்க மகிழ்ச்சி! நன்றி! பாராட்டு!

(2) அன்பு மகளே! உன் அஞ்சலில் "நீங்கள் அனுப்பிய அனைத்துக் கடிதமும் கிடைக்கப் பெற்றேன். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்". இந்த வாசகங்கள், நீ, என்னுடைய இரண்டு அஞ்சல்களையும் மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்த பிறகுதான் எழுதப்பட்டவையா?! ஏனென்றால், நீ பல்வேறு வகையானக் குழப்பங்களில் இருக்கின்றாய்; ஒரு சில பதட்ட நிலைகளில் இருக்கிறாய்; அருளுலகின் பழக்க வழக்கங்களையும், பயிற்சி முறைகளையும், யார்யாருக்கு எந்தெந்த நேரத்தில் எப்படி எப்படி அறிவுரைகள்

செயல்பாட்டு முறைகள் வழங்கப்படும் என்ற செய்திகள் முதலியவற்றைத் தெரியாதவளே நீ என்ற நிலையில் புலம்பி அழுகின்ற நிலையில் இருக்கின்றாய். உன்னால் சுற்றுப்பயண மூன்று நாள் தொடர் நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மக்களுக்குப் புரிய வைக்க முடியவில்லை. இவற்றால் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய் ... என்று உன்னைப் பற்றிய தகவல்கள் தலைமைப்பீடத்திற்கு நிறையக் கிடைத்தன!

எனவேதான், அருளாட்சி நாயகமான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார், அண்ட பேரண்ட அருட்பேரரசர் அவர்களின் அருளையும், அநுமதியையும் பெற்று அவசர அவசியமாக இரு அஞ்சல்கள் உனக்கு எழுதப்பட்டன. அந்த அஞ்சல்களின் நடையழகும், பொருளாழமிக்கச் சொல்லழகும்; அவை உனக்கு உணர்த்த விரும்பும் அறிவுரைகளும்; உண்மையிலேயே உனக்குப் புரிந்தனவா? இது போன்ற தமிழை நீ எங்குமே, எப்போதுமே படித்திருக்க முடியாது! எனவே, இந்த இரு அஞ்சல்களைக் குறைந்தது 5, 6 தடவையாவது திரும்பத் திரும்பப் படித்து நமது அருட்பயண நிகழ்ச்சிகள் பற்றி மறு சிந்தனை செய்து பார்! உனக்கு எதுவும் அதிகம் புரியாவிட்டால்; ஏற்கனவே உனக்கு எழுதிட்ட 30, 40 அஞ்சல்களைப் படித்துப் பார். அஞ்சல்களை கோப்பில் (File) பாதுகாக்கவும். D.M. மூலம் தூக்குவாளியும், கோப்பும் கொடுத்தனுப்புகிறோம்.

குறிப்பு: அன்பு மகளே! உன்னுடைய முற்பிறவிகளின் காரணமாகவும்; இப்பிறவியின் யோகங்களின் காரணமாகவும்தான் உன்னைத் தஞ்சை, திருச்சி என்ற இரு மாவட்டங்களும் இணைந்த கிழக்கு மண்டலத்தின் மாபெரும் பொறுப்பில் செயல்படச் செய்ய வைக்க விரும்புகிறோம் யாம். ஆனால், நீயோ விரகாலூர் ஊருக்கு

மட்டும் தலைவியாக இருந்தால் போதும்! என்றும்; விரகாலூர் வட்டாரத்து மக்களோடு மட்டுமே உன்னுடைய இயக்கத் தொடர்புகளை நிறுத்திக் கொண்டால் போதும் என்று எண்ணுகிறாயே! பிறகு காலப்போக்கில் மண்டல அளவில் புதிய புதிய பதவிகளுக்காக ஏங்கக் கூடாது! அதிலும், நீ ஓர் அருட்செல்வி! ஆத்தாள் தேவி சமயபுரம் மாரியம்மனின் பேரன்புக்குரியவள்! நன்றாக யோசித்துக் கொள்! பிறகு என்னைக் குறை கூறக் கூடாது!

(3) அன்பு மகளே! அருளாட்சி அமைப்புப் பணிக்காகவும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்துக்காகவும் நீ இப்பிறப்பில் முழுமையாக உழைத்தே ஆக வேண்டும். உன்னுடைய பிறவிப் பயனே அதுதான். அதற்காக நீ எண்ணற்ற அருட்கலைகளையும், அறிவியல்களையும் (The Divine Arts and Sciences) கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் அருளுலக இரகசியங்களை (The Divine Secrets) குருதேவரிடம் நேரடியாகக் கற்றுக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் இரகசியமாகக் காப்பாற்ற வேண்டும். உன்னுடைய அச்சமோ, கூச்சமோ, மாச்சரியமோ, பயமோ நீ விரைந்தும், விரிந்தும் பயிற்சி பெறுவதை தடை செய்து விடக் கூடாது! புரிந்தால் புரிந்து செயல்படு! இல்லாவிடில் விலகியிருந்து செயல்படு! இப்படி எழுதுவதற்கு வருத்தப்படாதே! ஏனென்றால், உன்னை பிரஞ்சு நாட்டின் சோன் ஆப் ஆர்க் (The Joan of Arc), இராணி மீனாட்சி, இராணி மங்கம்மாள், வடநாட்டின் சான்சி ராணி, ... முதலிய மிகப் பெரிய வீராங்கனைகளோடு ஒப்பிட்டுக் கனவு கண்டு கொண்டிருக்கும் ஞானத்தந்தை யாம். ஆனால், நீயோ தொட்டால் சிணுங்கி என்ற கொடி போல் சின்னச் சின்னச் செயல்களுக்கெல்லாம் மனக்குழப்பம் அடைகிறாயே! சிந்தைக் கலக்கமடைகிறாய்! கண்ணீர் விடுகிறாய்! கவலை அடைகிறாய்! பயப்படுகிறாய்! தலைமைப் பதவியை விட்டு விலகி நின்று

செயல்படலாமா என்று பிறரிடம் கேட்கிறாய்! உன்னை எப்படித் திருத்துவது என்று தெரியவில்லை.

(4) அன்பு மகளே! ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி! அவரவருடைய அறிவுக்கும், ஆர்வத்துக்கும், ஆற்றலுக்கும், உண்மையான பத்திக்கும், தொடர்ந்த உழைப்புக்கும், குருதேவரிடம் நேரடியாகப் பெறக் கூடிய ஏட்டறிவுக்கும், பட்டறிவுக்கும் ஏற்பத்தான் சத்தி, சித்தி, முத்திகளைப் பெற முடியும்.

பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறியான சீவநெறியெனும் இந்துமதத்தில் "குருவில்லா வித்தை பாழ்", "குரு தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது", "குருவழியே நல்வழி", "குருபத்தியே அனைத்து வகையான பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைத் தரும்", "குருவே அனைத்துக்கும் கரு தரு திரு", "குருவுக்குள் தான்; தனக்குள் குரு என்ற நிலை எய்துதலே முழுமையான அருள்நிலை" ... என்பன போன்ற கருத்துக்கள்தான் உயிர்நாடியானவை! இவற்றை நீ புரிந்து கொள்ள வேண்டும்.

<u>குருவாக இருப்பவர்கள் யார்யாருக்கு என்னென்ன தரம், திரம், திறம், மனப்பக்குவம், தொண்டுள்ளம், மெய்யான குருபத்தி, ... என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக ஏட்டறிவையும், பட்டறிவையும் **முறையாக அவ்வப்போது சிறிது சிறிதாக** இட்டும் தொட்டும் சுட்டியும் வழங்குவார். அப்படியல்லாமல் எத்தகையவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு **முழுமையாக** அருள் வழங்கிட மாட்டார்! மாட்டார்! மாட்டார்! அப்படி அருள் வழங்கிட ஒருபோதும் தாத்தாக்களும், ஆத்தாக்களும் சம்மதம் வழங்கிட மாட்டார்கள். இதை நீ புரிந்து கொள். எனவே, குருதேவர் யாருக்கும் எளிதில் அருள் தர மாட்டார் என்ற குற்றச்சாட்டு தவறானது என்பதைப் புரிந்து கொள்.</u>

**<u>சிறப்புக் குறிப்பு:</u>** அன்பு மகளே! பெண்ணுகிய உனக்குச் சுற்றுப்பயணம் வந்து திரும்பியதிலிருந்து தொடர்ந்து எழுதி வரும் இந்த மூன்ருவது அஞ்சல் வரை அப்படியே நகலெடுக்கப்பட்டுத் தமிழகம் முழுதும் அனுப்பப்பட்டு வருகிறது. ஏனென்ருல், இந்த அறிவுரைகள் உனக்கு மட்டுமல்ல! நமது இயக்கத்தார் அனைவருக்கும்தான்! எனவே, தைரியமாக இரு! இரகசியங்களைக் காப்பாற்று! ஒரு மண்டலத்துக்கே தலைவியாகிடும் தகுதியை வளர்த்துக் கொள். திருவையாறு, பெரும்புலியூர், புள்ளம்பாடி ... முதலிய இடங்களில் நடைபெறும் யாகத்திற்குச் சென்று வா. புதிய யாகசாலைகளைத் துவக்கிடு! இரண்டு மாவட்டங்களிலும் தொடர்ந்து சுற்றுப்பயணங்களை மேற்கொண்டிடு! வெற்றியுண்டாக வாழ்த்துகிறேம்!

(5) இனிமேல் யாருக்கும் பேருந்துக் கட்டணம் தரத் தேவையில்லை. யாகத்திற்கு யார் வந்தாலும் வரவேற்று வாழ்த்து. யாகத்தில் கலந்து கொண்டவர் அனைவருக்கும் குருதேவராகிய யாம் வாழ்த்துகிறேம். உனது அப்பாவின் நலனுக்காகவும், பால்காரத் தமிழரசனுக்காகவும் தொடர்ந்து பூசைகள் நடைபெறுகின்றன. இத்துடன் முடிகயிறு, திருநீறு, குங்குமம் அனுப்பி உள்ளோம். குங்குமத்தை பெண்கள் மட்டும் பூசவும். முடிகயிறு தந்தையும், தமிழரசனும் கையில் (மணிக்கட்டு) கட்டவும். திருநீறைப் பூசிக் கொள்ளவும்.

(6) அனேகமாகத் திருச்சி வந்து (10 தினங்களில்) தங்குவோம். அப்போது சிறப்புப் பூசையாக தேவி சமயபுரம் மாரியம்மனுக்கும், தேவி ஓயாமெரிக்கும் செய்ய இருக்கிறேம். அப்பூசைகள் ஒருசில பாதிப்புற்ற குடும்பங்களுக்கு மட்டுமே; அதுவும் பெரும் பொருட்செலவில் செய்யப்படுகின்றன. உன்ஞல் எல்லோரையும் போல் பூசையில் கலந்து மகிழ்ச்சியோடு கலக்க குழப்ப மயக்கமின்றி போக முடியுமென்ருல் வந்து கலந்து கொள்ளலாம். நீ எதிர்பார்ப்பது போல் யாரும் இருக்க மாட்டார்கள். யாரையும் குறை கூறக்

கூடாது! உன்னுடைய அச்சம் கூச்சம் பயத்தால் பிறரை குற்றம் சாட்டிடாதே! முடியாவிடில் கலந்து கொள்ள வேண்டாம். உடன் விரிவாகப் பதில் எழுதுக.

நீ வருவதும் வராததும் உன் விருப்பம்?!?!

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்,**

**தலைமைப்பீடம்,**

**27/7/89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்டது.//**

# மக்களுக்கு அருள்வழங்கி பாதிப்புக்களைப் போக்குதலே மக்கள் தொண்டு

ஓம்

தலைமைப்பீடம்,
31-7-89.

அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம், சித்தரடியாள், சித்தர் மகள், குருதேவரின் செல்ல மகள், செல்வ மகள், பாச மகள் கி. சமுத்திரவள்ளி நாச்சியார் (சித்தரடியாள் கி. சமுத்திரவள்ளி, விரகாலூர் P.O., திருச்சி - 621722) அவர்கள் சமூகத்திற்கு,

குருதேவரின் செயல்நிலை பாராட்டுத் திருவோலை:

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே, அம்மையப்பன்களின் திருவருளே!

2) தங்களின் 28-7-89ஆம் நாளைய அஞ்சல் இன்று 31-7-89ஆம் தேதிதான் வந்து சேர்ந்தது. தங்களின் ஞானத்தந்தை குருதேவர் உடனே கூறிய திருவுளக் கருத்துக்கள் தங்களுக்கு உடனே தெரிவிக்கப்படுகின்றன.

3) உன்னுடைய தந்தைக்கும், மற்றபடி நமது இயக்கச் செயல்வீரர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு என்றைக்கும், எப்போதும் தலைமைப்பீடத்தில் இருந்து கிடைக்கும் என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, **“மக்கள் தொண்டே மகேசன் தொண்டு” என்பதுதான் சித்தர் நெறி.** அதன்படிதான்

பீடாதிபதிகள் முதல் தங்களைப் போன்ற தொண்டர்கள் வரை மக்களின் நோய்நிலைகளையும், பேய்நிலைகளையும், ஏக்க நிலைகளையும், ஏமாற்ற நிலைகளையும், அச்ச கூச்ச மாச்சரிய நிலைகளையும், பல்வேறு வகையான மந்திரவாதிகளின் பாதிப்புக்களையும், நாள் கோள் மீன் பாதிப்புக்களையும் நலப்படுத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் அருளுலகத்தவர்களின் முழுமையான அன்பையும், ஆதரவையும், எல்லாவகையான ஏந்துகளையும், பல்வேறு வகையான பாதுகாப்புக்களையும் பெற்றுக் கொண்டேயிருக்க முடியும். **இதைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்.**

4) விரகாலூர் சுற்றுப்பயணத்தில் தங்களால் குருதேவரை அதிகமாகக் கவனிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால், அதைப்பற்றி குருதேவருக்கு ஊசிமுனை அளவு கூட வருத்தம் கிடையாது. ஆனால், தாங்கள் குருதேவரின் நூற்றுக்கும் மேற்பட்ட அஞ்சல்களைப் படித்திருந்தும் அச்சம், கூச்சம், மாயை, அனுவசிய பயம், உலகியல் கற்பனைகள், கனவுகள், மூடநம்பிக்கைகள், கண்மூடிப் போக்குகள், பழமையான நம்பிக்கைகள், ... முதலியவற்றுடனேயே தடுமாறி அருளுலகப் பயிற்சிகளையோ, அருளுலகத்தின் நடைமுறைகளையோ தெரிந்து கொள்ள முடியாமல், புரிந்து கொள்ள முடியாமல் விளையாட்டுப் பிள்ளையாக சிரித்தால் சிரிக்கவும், அழுதால் அழவும் இருப்பது பற்றித்தான் குருதேவர் மிகவும் கவலைப்பட்டார். ஏனென்றால், நீங்கள் மிக விரைவில் திருச்சி மாவட்டம் முழுவதும் அருட்பணி விரிவாக்கத் திட்டம் செயலாகிட பாடுபட்டாக வேண்டும்.

அதாவது, திருச்சி மாவட்டம் முழுவதும் பரவலாக ஏழை எளிய பாட்டாளி பாமர மக்களை *பொய்யான ஹிந்துமதத்தில்* இருந்தும்; பழமையான மூடநம்பிக்கைகள், பயனற்ற பழக்க வழக்கங்கள், தேவையில்லாத சாத்திர சம்பிறதாய சடங்குகள், புரியாத அச்சங்கள், கூச்சங்கள், மாயைகள், மந்திரவாதிகளின் தொல்லைகள், நாள்கோள்

மீன் பாதிப்புக்கள் முதலியவைகளிலிருந்தும் காப்பாற்றிடல் வேண்டும். அதற்காக கிராமங்கள் தோறும் யாகசாலை வைத்து, மெய்ஞ்ஞானக்கொடி யேற்றி; இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தையும் தோற்றுவித்து அவற்றின் மூலம் அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் கணக்கற்றுத் தோற்றுவிக்க வேண்டும்! தோற்றுவிக்க வேண்டும்!! தோற்றுவிக்க வேண்டும்!!! தோற்றுவித்தேயாக வேண்டும்!

தங்களுக்குத் துணையாக உழைத்திட தங்களது குடும்பத்தார்களும், உற்ரூர் உறவினர்களும், ஊரார்களும், அக்கம்பக்கத்து ஊர்க்காரர்களும் தாங்களாகவே முன் வந்துவிட வேண்டும். <u>அந்த அளவுக்கு தங்களது செயல் தரமும், திரமும், திறமும், தீரமும், வீரமும், அறமும், மறமும், ஈகமும், ... உடையதாக இருந்திடல் வேண்டும்! இருந்திடல் வேண்டும்!! இருந்திடல் வேண்டும்!!!</u> <u>**இவற்றைப் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்து சிந்தித்துச் செயல்பட முற்படுங்கள்**</u>.

5) தங்களால் விரகாலூர் சுடலையில் செய்யப்படுகின்ற பூசைக்கு திருச்சி மாவட்டத்தில் உள்ள கடுமையான பாதிப்புக்களில் உள்ள நோயாளிகளையும், பேயாளிகளையும் விரகாலூர் சுடலையைத் தேடி வரச் செய்ய வேண்டும். அதேபோல், தாங்கள் தனவளநல்லூரில் யாகம் செய்து அருள்வழங்கும் பணிகளின் வெற்றிச் சிறப்பால்; இந்த யாகச்சாலையே திருச்சி மாவட்டம் முழுவதற்கும் வழிகாட்டியாக அமையட்டும்.

<u>**குறிப்பு**</u>:- தாங்களும் தங்களது இயக்கத்தவர்களும்; பாதிப்புக்குரிய நோயாளிகளும், பேயாளிகளும் 11 வாரம் வந்து மந்திரித்துச் செல்லும் கால இடைவெளிக்குள் ஆண் பெண் என்ற வேறுபாடு இன்றி எல்லோருமே குருதிவண்ணம் சிவப்பாடையை அனைவரும் அணிந்து கொள்ளும் நிலையை உண்டாக்க வேண்டும். அப்பொழுதுதான்

**சிவந்த ஆடையை அணிந்த சித்தர் நெறி வெற்றி பெற்று** அருளாட்சி அமைந்திடும்.

6) நீ பெண் என்பதால்; நீயே சென்று எல்லா சுற்றுப்பயண ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்பது கிடையாது. மற்றவர்களை அனுப்பித்தான் செய்ய வேண்டும். பிறரை நம்பித்தான் ஆக வேண்டும். எனவே, கவலைப்படாதே. ஆனால், நீ இனிமேல் நடக்கக் கூடிய சுற்றுப்பயணங்களில் அதிகமாக அறிவுரைகளையும், பயிற்சிகளையும் குருதேவர் அருகிலேயே இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும், தலைவி என்ற முறையில். அதாவது எல்லோரையும் வேலை வாங்கக் கற்றுக் கொள். நீயே வேலை செய்யத் தேவையில்லை.

7) உடனே புள்ளம்பாடி Dr.அமிர்தராசுக்குப் போடப்பட்டுள்ள கடிதங்கள், அவ்வூர் பெரியவர்களுக்கு எழுதிய அஞ்சலைப் படித்து; குருதேவர் புள்ளம்பாடி வர ஏற்பாடு செய்யுங்கள். புள்ளம்பாடிக்கு திரு Dr. அமிர்தராசு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். உடன் பதில்.

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
**31-7-89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து வேதம் கடவுளர்களாலே எழுதப்பட்டது

"இந்து வேதம் கடவுளர்களாலே எழுதப்பட்டது."

"இந்து வேதம் அண்டபேரண்டங்கள் அனைத்திலும் அருளாட்சி செய்கின்ற ஒன்று."

"இந்து வேதம்தான் இந்த உலகிலுள்ள எல்லா இனத்தவர்களுக்கும், இனத்தினர்களுக்கும், மொழியினர்களுக்கும், நாட்டினர்களுக்கும் பொதுவான ஒன்று என்று அறிவித்துக் கொள்கின்றது."

"இந்த இந்து வேதம்தான் எதனையும் பகுத்தறிவுப் பூர்வமாக விஞ்ஞானச் சூழலில் விளக்குகின்றது."

"இந்த இந்து வேதம்தான் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்று உலகியலையே நான்கு பெரும் பகுதிகளாகப் பகுத்து மிகத் தெளிவான வாழ்வியல் நெறிகளை, முறைகளை, ஒழுகலாறுகளை பண்டைய மரபு கெடாமல் பாதுகாக்கும்படி வலியுறுத்துகிறது."

"இந்து வேதம் ஒன்றுதான் மானுட ஒற்றுமை, சமாதானம், சமத்துவம், அமைதி, அன்பு, நட்பு, தோழமை, ஈவு, இரக்கம், முன்னோர்களை வழிபடல், மூத்தோர்களைப் பணிவோடும் கனிவோடும் போற்றிப் பேணிப் பாதுகாத்திடல் வேண்டும் ... முதலிய அறிவுரைகளை அருளுரைகளாக வழங்குகின்றது."

"இந்து வேதம் ஒன்றினால்தான் மனிதம், மனிதத்துவம், மானுட நேயம், மானுட ஆதரவு, மானுடப் பற்று, மானுடப் பாசம், மானுடப் பிறப்பின் அருமை, பெருமை, அரிய தன்மைகள் அல்லது

பண்பு நலன்கள் ... முதலியவற்றையெல்லாம் பாதுகாக்க முடியும்; பசுமையாக என்றென்றும் வளர்த்திட முடியும். மதமாற்றம் செய்தல், மதப்போர், சண்டை, சச்சரவு, கலகம், ஆக்கிரமிப்பு, ... முதலியவை எல்லாம் மானுடர்களுக்கிடையே முளை விடாமல் பார்த்துக் கொள்ளும் ஆற்றல் இந்து வேதத்திற்கு மட்டும்தான் இருக்கிறது."

..................................... ..................................... ............................

"இந்து வேதம் ஒரு முழுமையான வேதம்."

... என்ற இந்தப் பத்துக் கருத்துக்களும் இந்து வேதம் நான்கிலுமே முதல் மண்டலத்தில், 30 முதல் 40 நாள் உரைக்கோவை வாசக மலர்களாக; நாள் வாக்கு மலர்களாக; நாள் வாக்கிய மலர்களாக, நாள் வாசக மலர்களாக இருக்கின்றன. அதாவது மேலே குறிப்பிட்ட பத்தும் இருக்கு வேதம் காண்டம் : 1, மண்டலம் : 1, நா.உ.கோ.வா. : 30 முதல் 40; அசுர வேதம் காண்டம் : 1, மண்டலம் : 1, நாள் வாக்குமலர் : 30 முதல் 40; அதர்வான வேதம் காண்டம் : 1, மண்டலம் : 1, நாள் வாக்கிய மலர் : 30-40; யாம வேத காண்டம் : 1, மண்டலம் : 1, நாள் வாசக மலர் : 30-40 என்று இடம் பெற்றிருக்கின்றன.

**//"இந்து வேதத்தில் தை மாதத்தின் சிறப்புக்கள்" என்ற கட்டுரையில் குருதேவர் வழங்கிய சில வாசகங்கள்.//**

# இந்து வேத முழக்கங்கள்

1. இந்து வேதம் வளர்ப்போம்! இந்தியாவைக் காப்போம்!
2. இந்து மதம் ஆட்சி மீட்சி பெறச் செய்வோம்! இந்தியாவில் பண்பாட்டுப் புரட்சி விளைவிப்போம்!
3. இந்து வேதம் கற்பிப்போம்! இந்தியாவை ஒற்றுமைப்படுத்துவோம்!
4. இந்து மத வழி கல்வி, கலை, தொழில் ஆட்சியுறட்டும். இந்தியாவை அடிமை நிலைகளிலிருந்து மீட்சி பெறச் செய்வோம்!
5. இந்து மத நாகரிகத்தை மறுமலர்ச்சி பெறச் செய்வோம்! இந்திய வறட்சி, மிரட்சி அனைத்தையும் விரட்டி ஓட்டுவோம்!
6. செந்தமிழ் மொழியிலுள்ள இந்து வேதத்தை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்ப்போம்! இந்து மதத்தவர்க்கிடையில் உள்ள அறியாமைகள், புரியாமைகள், தெரியாமைகள் அனைத்தும் அகற்றுவோம்!
7. செந்தமிழாசிரியர்களை இந்து வேத ஆச்சாரியார்களாக்கி இந்தியா முழுதும் அனுப்பி இந்து வேதம் பரப்புவோம். இந்தியர் அனைவரிடமும் விந்தைமிகு பந்த பாச இந்து மத ஒற்றுமையுணர்வை விளைவிப்போம்!
8. இந்து வேதமே (இந்துக்களின்) இந்தியரின் அகவாழ்வின் வறுமைகளையும், வெறுமைகளையும், ஏக்கங்களையும், ஏமாற்றங்களையும் போக்கிடும், நீக்கிடும்! போக்கிடும், நீக்கிடும்!! போக்கிடும், நீக்கிடும்!!!
9. இந்து மதமே இந்தியாவின் புறவாழ்வில் உள்ள மேனாட்டு மோகப் போதையை அகற்றி அடிமை நிலையை மிடிமை நிலையை விரட்டியோட்டிடும்! விரட்டியோட்டிடும்!! விரட்டியோட்டிடும்!!!
10. இந்துக்களே! இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் புரிந்து கொண்டால்தான் இந்தியாவைக் காப்பாற்ற முடியும்! இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்ற முடியும்!! இந்திய நாகரிகத்தைக் காப்பாற்ற முடியும்!!!

***//"ஆதிசிவனாரின் இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//***

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

- குருபாரம்பரிய வாசகம்



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-